# நானும் என் தேவனும் (1)

Praise the Lord:
ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாயிருக்கிற ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம்.

## எபிரெயர்/Hebrews 7:26-27

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்.
அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்துமுடித்தார்.

> சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,
> அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,
> பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. (கொலோசெயர் 1:19-20)

## 1 பேதுரு/1 Peter 2:9

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

## 1 கொரிந்தியர்/1 Corinthians 12:5

ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.

> ஊழியம் என்ற வார்த்தையை வேதத்தில் தேடி வாசித்து தியானியுங்கள்.
> "........ மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்." (எபேசியர் 6:6)
> ".......கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்." (எபேசியர் 6:8)
> "......தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்..." (கொலோசெயர் 3:22)
> "......கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்." (கொலோசெயர் 3:24)

ஊழியம் என்ற வார்த்தையின் மூலமொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையின் விளக்கம்:
(Outline of Biblical Usage)

I. service, ministering, esp. of those who execute the commands of others
II. of those who by the command of God proclaim and promote religion among men
A. of the office of Moses. B.of the office of the apostles and its administration
C. of the office of prophets, evangelists, elders etc.
III. the ministration of those who render to others the offices of Christian affection esp. those who help meet need by either collecting or distributing of charities
IV. the office of the deacon in the church. V. the service of those who prepare and present food

> தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்,
> அவனவனுக்குத்தேவன் பகிர்ந்தவிசுவாச அளவின்படியே,
> தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்....... (ரோமர் 12:3)

## எபிரெயர்/Hebrews 7:23-25

....அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக்கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்.
மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.

என் தேவனே, ஆண்டவரே உமக்கு நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தத்தை அதிகமதிகமாய் அறிந்து நிறைவேற்ற ஆலோசனை கொடுத்து, செயல்படுத்த ஆசீர்வதியும். ஆமென்.